**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 12-04-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-04-12 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-04-13 | 2022-04-14 | 2022-04-15 | 2022-04-16 | 2022-04-17 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 12.0 | 8.0 | 0.0 | 0.0 | 0.0 |
| டிமாக்ஸ் (° C) | 35.0 | 36.0 | 36.0 | 37.0 | 37.0 |
| டிமின் (° C) | 27.0 | 27.0 | 27.0 | 28.0 | 28.0 |
| RH I (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| RH II (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கிமீ) | 6.0 | 6.0 | 6.0 | 8.0 | 8.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 160 | 200 | 200 | 140 | 140 |
| மேகக்கணி (ஆக்டா) | 6 | 5 | 5 | 4 | 2 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஏப்ரல் 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்பநிலை 35.0°C- 37.0°C குறைந்த பட்சவெப்பநிலை 27.0°C - 28.0°C எனும் வேறுபாட்டிலும் இருக்கும். வானம் தெளிவானது முதல் சிறிது மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 06 - 08 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஏப்ரல் 17 முதல் ஏப்ரல் 23 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில்இயல்பின் கீழ் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

வரும் நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் திறந்த வெளியில் அறுவடை செய்யப்பட்ட உளுந்து மற்றும் பாசிப்பயறு விதைகளை உலர வைப்பது தவிர்க்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கருப்பு கிராம் | சித்திரைப் பட்டத்தில் உ ளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் விதைகளை விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனஸ் 10 கிராம் கொண்டு விதைநேர்த்தி செய்யவும் அல்லது கார்பென்டாசிம் (அ) திரம் 2 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து 24 மணிநேரம் கழித்து விதைக்கவும். பயனுள்ள ரைசோபியம் பாக்டீரியாக்களை பூசண மருந்து கலந்த விதையுடன் கலக்கக் கூடாது. ட்ரைக்கோடெர்மா அல்லது சூடோமோனஸ் கலந்த விதையுடன் பயனுள்ள பாக்டீரியாக்களை கலந்து விதைக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | எதிர்பார்க்கும் லேசான மழையை முதல் மிதமான மழை பயன்படுத்தி வாழை வளரும் பருவம் வாழை நடவு செய்து 5 மாதம் முடிவடையும் தருவாயில் உள்ள செடி ஒன்றுக்கு தலா 20 கிராம் என்ற அளவில் அசோஸ்பைரில்லம் + பாஸ்போ பாக்டீரியா கலந்து இடவேண்டும் |
| தேங்காய் | மழை எதிர்பார்க்கப்படுவதால் தென்னை மரத்தின் பாத்திகளை களைக் கொத்து கொண்டு கிளறி விடுவதன் மூலம் மழைநீரை சேகரிக்கலாம் |
| கொய்யா | நிலவும் பருவச்சூழ்நிலையில் கொய்யா பழப்பயிரில் பழஈக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் அறிகுறியாக பழ ஈக்களின் புழுக்கள் மற்றும் ஈக்கள் பாதி கணிந்த பழங்களையே தாக்கும். பழத்தின் மீது முட்டையிடுவதற்காக போடப்பட்ட துளைகள் காணப்படும். பழத்திலிருந்து துர்நாற்றம் வீசவீ துவங்கும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்கருக்கு 12 இனக்கவர்ச்சிப் பொறி வீதவீம் அதாவது 5 லிட்டர் வாளியில் 3 லிட்டர் தண்ணீர்ணீ, 2 கருவாட்டு துண்டு, 1கிலோ கொட்டமுத்து பிண்ணாக்கு, 50 கிராம் நாட்டு சர்க்கரை, 2 அழுகிய வாழைப்பழம், 2 அன்னாசிப்பழத் துண்டு மற்றும்; இவற்றை கலந்து வைக்க வேண்டும். |
| வாழை | நிலவும் பருவச்சூழ்நிலையில் வாழை பயிரில் மஞ்சள் இலைப்புள்ளி நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் அறிகுறியாக, இலையின் இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இடையில் சிறிது நிறமாற்றம் ஏற்படும். ஒரு காலகட்டத்தில் இந்த புள்ளிகள் வெளிறிய மஞ்சள் கோடுகள், பழுப்பு நிற கோடுகள் மற்றும் நீள்வட்ட புள்ளிகளாக உருவாகி, இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இணையாக காணப்படும். இந்நோய் பாதித்த வாழையில் உள்ள இலைகள் கருகி உதிர்ந்து விடும். இந்நோயானது பயிர்களிடையே வேகமாக பரவும் தன்மையுடையது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருணீ க்கு 10 கிராம் சூடோமோனஸ்புளுரோசன்ஸ், 10 கிராம் பேசிலஸ்சப்டிலஸ், 10மில்லி பஞ்சகவ்யம், 5 கிராம் நாட்டுசர்க்கரை இவற்றை கலந்து செடிகள் நன்கு நனையுமாறு காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கோடையில் பெய்யும் மழையுடன் இடியும் ,மற்றும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும் .எனவே கால்நடைகளை மாலை நேரங்களில் மேய்ச்சலுக்கு விட வேண்டும்.கோழிகள் வெள்ளை கழிச்சல் நோய் வராமல் இருக்க அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். |
| வெள்ளாடு | கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடப்புழுக்கான குடற்புழுநீக்க மருந்தினை ஏப்ரல் - ஜீன் மாதத்தில் அளிக்கலாம். குடற்புழு நீக்கமருந்துகளை அதிகாலையில், வெறும் வயிற்றுடன் உள்ள ஆடுகளுக்கு கொடுக்க வேண்டும். |

**பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:**

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | வரும் நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரத்தன்மை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பை,தக்கைப்பூண்டு மற்றும் கொழிஞ்சி போன்றவற்றை தெளிக்கவும். |
| பொது ஆலோசனை | கடந்த இரண்டு நாட்களாக புதுக்கோட்டை மாவட்டத்தை சுற்றியுள்ள பகுதிகள் பரவலாக லேசான முதல் மிதமான மழை பெய்துள்ளது மண்ணில் இருக்கும் ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்யவும் . உழவின் போது ஏற்படும் பள்ளம் நீரைப் பிடித்து வைப்பதால் நீர் ஊடுருவுதல் அதிகரிக்கும் . சரிவுக்கு குறுக்காக அமைத்து உழவு சால்கள் நீர் வழிந்தோடுவதைத் தடுத்து அதன் திசை வேகத்தை குறைத்து தேக்கும் திறனை அதிகரிக்கிறது . மேலும் விதைப்பிற்கு முன் பெறப்படும் மழையை சேமிக்கலாம். |